

# நன்னெறி மற்றும் இணக்க உதவிமையம்

Esterline

**வணிக இணக்கம் மற்றும் வர்த்தக நடத்தை மற்றும் நன்னெறியின் உயர்ந்த தரநிலைகளை எஸ்டெர்லைன் நிறுவனங்கள் அடைய முயற்சி செய்வதை உறுதிசெய்ய,** எங்களுக்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது. நமது அன்றாட பணியிலுள்ள தரநிலைகளை நிலைநிறுத்துவதற்கான பொறுப்பை அனைத்து பணியாளர்களும் இயக்குனர் குழுமமும் பகிர்ந்துகொள்ளவேண்டும். நமது வர்த்தக நடத்தை, வர்த்தக உறவுகள், பொருள் உற்பத்தி ஆகியவற்றில் உள்ள நமது பிரதான மதிப்புகளுக்கும் நன்னெறிகளுக்குமான உறுதியளிப்பின் மற்றும் கடைப்பிடித்தலின் அமைப்பையே, *எஸ்டெர்லைன் வழியில் வாழ்வது, ஒவ்வொரு நாளும்* என்று நாம் குறிப்பிடுகிறோம்.

**சிறந்த நன்னெறிசார் தரநிலைகள்,** எஸ்டெர்லைனின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் மிகவும் முக்கியமானவை. உங்களுடைய அறிவு, உங்களுடைய சக்தி, எல்லாவற்றிற்கும் மேலாக உங்களுடைய நேர்மை எங்களுக்குத் தேவைப்படுகிறது. கேள்விக்குரிய செயல் எதையும் உங்களது மேற்பார்வையாளருக்கு, மேலாளருக்கு அல்லது உங்கள் நிறுவனத்தின் நன்னெறி ஆலோசகருக்கு தெரிவிக்குமாறு உங்களை ஊக்கப்படுத்துகிறோம்.

## உங்கள் நன்னெறி ஆலோசகர்:

அவர்களால் விஷயத்தை தீர்க்க முடியவில்லை என்றாலோ, உங்களால் அவர்களை அடைய முடியவில்லை என்றாலோ, மனித வளத்தின் பிரிவு துணைத் தலைவரைத் தொடர்புகொள்ளவும் அல்லது வணிக இணக்க விஷயம் என்றால், உங்களுடைய பிரிவு இணக்க நிர்வாகியிடம் அல்லது எனது எஸ்டெர்லைன்என்பதில்*வணிகச் சிக்கல் தெரிவித்தல் விண்ணப்பம்* என்பதற்கு செல்லவும். இன்னமும் உங்களால் தீர்வைப் பெறமுடியவில்லை என்றால், எஸ்டெர்லைனின் வழிகாட்டுதலுக்கான பொதுக் குழுவைக் கேட்கவும்.

வணிக அல்லது வர்த்தக இணக்கம் பற்றி தெரிவிக்கும் மக்கள் அல்லது நல்ல நம்பிக்கையில் விசாரணைக்காக தகவலை வழங்கும் நபருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்தவிதமான பதிலடியை எந்த வகையிலும் எஸ்டெர்லைன் பொறுத்துக்கொள்ளாது.

## **பின்வரும் பகுதிகளில் உள்ள ஏதேனும் சிக்கல்கள் அல்லது விதிமீறல்களை நீங்கள் உடனடியாக தெரிவிப்பது** மிகவும் முக்கியமானதாகும்:

- கணக்கியல் அல்லது உள் கணக்கியல் கட்டுப்பாடுகள்;
- ஆயுத ஏற்றுமதி கட்டு-ப்பாட்டுச் சட்டம் (AECA) அல்லது ஆயுத விதி-முறைகளில் சர்வதேச டிரா:ஃபிக் (ITAR);
- தணிக்கை விஷயங்கள் மற்றும் அறிக்கையளித்தல்;
- வங்கியியல் மற்றும் நிதி;
- இலஞ்சம் அல்லது பிற ஊழல்;
- சுற்றுச்சூழல், உடல்நலம் மற்றும் பாதுகாப்பு (EHS);
- வணிக நடத்தை மற்றும் நன்னெறிக்கான எஸ்டர்லைன் விதித்தொகுப்பு;
- நிதிக் கட்டுப்பாட்டுத் தரநிலைகள்;
- உள் வணிகம்;
- அறிவுசார் சொத்து;
- தவறான பயன்பாடு அல்லது நிறுவன சொத்துத் திருட்டு;
- தர மற்றும் உற்பத்தி நடவடி-க்கைகள்; அல்லது
- வணிக இணக்கம்

...அல்லது உங்களை அசௌகரியமாக உணரச்செய்கிற அல்லது உங்களுக்கு நன்னெறிசார் கேள்வியை எழுப்புகிற எதுவும்; சரியான பிரிவை கண்டறிவது பற்றி கவலை கொள்ளவேண்டாம்.

உங்கள் பிற நன்னெறி வளங்களுடன் கூடுதலாக, குறிப்பிடத்தக்க அல்லது வழக்கத்திற்கு மாறான சிக்கல்கள், தெரிவிப்பது தொடர்பான சிக்கல்கள், அல்லது நன்னெறி மற்றும் இணக்கம் சார்பாக கேள்வி கேட்பது போன்றவற்றுக்காக எந்த நேரத்திலும் பயன்படுத்தும் வகையில் நன்னெறி மற்றும் இணக்க உதவிமையத்தை எஸ்டெர்லைன் தொடங்கியுள்ளது. நன்னெறி வளங்கள் எதையேனும் பயன்படுத்தும்போது, பிரச்சனையின் பிரத்தியேகங்கள் (அதாவது யார், என்ன, எப்போது, எங்கே) போன்றவற்றை வழங்குமாறு நீங்கள் கேட்படுவீர்கள், இதனால் பிரச்சனையை எளிதாக எஸ்டெர்லைனால் விசாரிக்க முடியும். அனைத்து அறிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு, முறையாக விசாரிக்கப்படும். அமெரிக்கா மற்றும் சட்டம் அனுமதிக்கின்ற வேறு சில இடங்களில், நீங்கள் விரும்பினால் உங்களின் பெயரை மறைத்துக் கொள்வதற்கு உங்களுக்கு வாய்ப்பிருக்கும். ஐரோப்பாவில், அடையாளமில்லாமல் தெரிவிப்பது அபூர்வமான விஷயங்களுக்கு மட்டுமே.

## எஸ்டெர்லைன்'ன் பிரதான மதிப்புகளாவன:

> மிகச்சிறந்த தரம்
> மரியாதை
> நேர்மை மற்றும் நன்னெறிசார் நடத்தை
> சட்டப்பூர்வ நடத்தை

## எங்கள் உறுதிமொழிகள்:

> நாங்கள் மிகச்சிறந்த பொருட்களை உருவாக்குகிறோம்.
> நாங்கள் உறுதிகூறுவதையே வழங்குகிறோம்.
> நாங்கள் நேர்மையாக போட்டிபோடுகிறோம்.
> நாங்கள் உண்மை பேசுகிறோம்.
> நாங்கள் அனைவரையும் மதிக்கிறோம்.
> நாங்கள் சட்டத்திற்கு கீழ்ப்படிகிறோம்.

## உதவிமையம்:

உள்-நுழைக:
www.esterline.com

தேர்வு செய்க:
நிறும ஆளுகை

அல்லது அழைக்கவும்:

| | |
|---|---|
| பிரேசில் | 00-800-1777-9999 |
| கனடா | 800-461-9330 |
| சீனா | 00-800-1777-9999 |
| டொமினிகன் குடியரசு | 00-800-1777-9999 |
| ஹாங்காங் | 00-800-1777-9999 |
| இந்தியா | .00-800-100-3428 |
| இஸ்ரேல் | 00-800-1777-9999 |
| இத்தாலி | 00-800-1777-9999 |
| ஜப்பான் | 00-800-1777-9999 |
| மெக்ஸிகோ (ஆங்கிலம்) | 00-800-1777-9999 |
| மெக்ஸிகோ (ஸ்பானிஷ்) | 001-866-376-0139 |
| சிங்கப்பூர் | 00-800-1777-9999 |
| யுனைடெட் கிங்டம் | 00-800-1777-9999 |
| யுனைடெட் ஸ்டேட்ஸ் | 800-461-9330 |

அல்லது பின்வரும் முகவரிக்கு எழுதவும்:
நன்னெறி உதவிமையம்
எஸ்டெர்லைன் டெக்னாலஜிஸ் கார்பொரேஷன்
500 108வது அவென்யூ NE
சூட் 1500
பெல்லெவ்யூ, WA 98004

*எஸ்டெர்லைன் வழியில் வாழ்வது, ஒவ்வொரு நாளும்*

EBC-ESL-PRC-201TA 10/2015